Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 50 | thalaivaasaltv@gmail.com | ஞாயிற்றுக்கிழமை நவம்பர் 22, 2020

## பலாலி அன்ரனி புர பகுதியில் உ எறிகணை குண்டுகள் மீட்பு



பலாலி அன்ரனி புர பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து இரண்டு துருப்பிடித்த நிலையில் காணப்பட்ட எறிகணை குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அண்டனி புரத்தில் தனியார் காணியின் உரிமையாளர் தனது காணியை துப்பரவு செய்யும் போது குறித்த குண்டுகளை கண்டுள்ளார் உடனடியாக துப்புரவு

03

## திருமண நிகழ்வில் பங்கேற்றதால் சாவகச்சேரியில் நூற்றுக்கணக்கானவர்கள் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம்- சாவகச்சேரியில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்டவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த திருமணத்தில் 50 பேர் மாத்திரமே பங்கேற்க முடியும். வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோர் கலந்து கொள்ள முடியாது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனாலும், முன்மொழியப்பட்ட நிபந்தனைகளை மீறி திருமண நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்டோர்

03

## தமிழர் உணவுப் பழக்கவழக்கத்தை இழிவுபடுத்திய பொலிஸ் அதிகாரி

### அங்கஜன் எம்.பி கடும் கண்டனம்



தமிழ் மக்களின் உணவு பழக்க வழக்கத்தை இழிவுபடுத்தும் முகமாக யாழ் நீதவான் நீதிமன்றில் கருத்து தெரிவித்த யாழ் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ கருத்தை நான் வன்மையாக கண்டிக்கிறேன் என நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நேற்று யாழ் நீதவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாண பொலிஸாரால் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் சூழலில்

03

## பாடசாலைக் கொரோனா கொத்தணியை உருவாக்கி விடாதீர்!

### ஆசிரியர் சங்கம் கோரிக்கை

நாளை(23.11.2020) தரம் 6 முதல் உயர்தரம் வரை பாடசாலைகள் ஆரம்பமாகும் என அறிவித்துள்ளீர்கள். இன்றுவரை மரணங்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன.

பாடசாலைக் கொரோனா கொத்தணியை உருவாக்கி விடாதீர்! என ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில்,

தொற்றாளர் எண்ணிக்கை உயர்ந்தே செல்லுகின்றது. ஆடைத் தொழிற்சாலை கொத்தணியும், பேலியகொட கொத்தணியும் நாடு முழுவதும் பரவியுள்ளது.

03

# 20 ஆயிரத்தை நெருங்கியது கொரோனா தொற்று

## இதுவரை 83 பேர் பலி

சற்று முன்னதாக மேலும் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் மொத்தத் தொற்று 20 ஆயிரத்தை நெருங்கியுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் 491 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் இன்று (நவ-22) சற்று முன்னதாக 175 பேருக்கு கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

03

## அலரி மாளிகையில் கொரோனா பிரதமர் அலுவலகம் மறுப்பு!

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையில் பணியாற்றும் எந்தவொரு ஊழியரும் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகவில்லை என்பதை உறுதிபடுத்துவதாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அறிக்கை பிரதமர் அலுவலகம் ஊடக பிரிவு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக அலரி மாளிகை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தேசிய நாளிதழொன்றில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானதும் ஆதாரமற்றதுமாகும்.

கொவிட்-19 நிலைமைக்கு மத்தியில் அரசாங்கம் மற்றும் சுகாதார பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையின் நாளாந்த பணிகள் எவ்வித தடையுமின்றி முறையான சுகாதார வழிகாட்டல்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

03

## வவுனியாவில் பறந்த சிவப்பு மஞ்சல் கொடி!

### பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியாவில் மாவீரர் வாரத்தினை முன்னிட்டு, சிவப்பு மஞ்சள் கொடிகளை வர்த்தக நிலையம் ஒன்றின் முன் கட்டியிருந்த நிலையில், அது குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, “மாவீரர் வாரத்தினை அனுஸ்டிக்கும் முகமாக வவுனியா ஆலடி தோனிக்கல்லில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில், சிவப்பு மஞ்சள் கொடி பறக்க விடப்பட்டிருந்தது

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை மாலை 7.30 மணியளவில் குறித்த வர்த்தக நிலையத்திற்கு சென்ற வவுனியா பொலிஸாரினால் பறக்கவிடப்பட்ட கொடிகளினை அகற்றுமாறு

03






# தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# கொழும்பு - கம்பஹா மாவட்டங்களில் சில பகுதிகள் நாளை விடுவிப்பு!

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தனிமைப்படுத் தப்பட்டுள்ள சில பகுதிகள் நாளை (திங்கட்கிழமை) காலை 5 மணி முதல் விடுவிக்கப்படவுள்ளது என இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கொழும்பு மாவட் டத்தின் பொறளை, வெல்லம்பிட்டி, கொழும்பு கோட்டை மற்றும் கொம்பனி வீதி ஆகிய பகுதிகள் விடுவிக்கப்படவுள்ளதோடு கம்பஹா மாவட்டத்தின் ஜா-எல மற்றும் கடவத்தை ஆகிய பிரதேசங்களும் நாளைக் காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் இருந்து விடுவிக்கப்பட உள்ளமை குறிப் பிடத்தக்கது.

# பாடசாலைகள் நாளை ஆரம்பம்!



கொரோனாவை கட்டுப்படுத்தும் செயலணி மற்றும் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின் அடிப்படையிலேயே பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப பெற்றோர் கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாடும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம் பிப்பது பாடசாலைகளை ஆரம்பிக்க முடியுமா என ஒத்திகை பார்ப்பதற்காக அல்ல எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளைத் தவிர்த்து ஏனையப் பகுதிகளில் உள்ள அனைத்து பாடசாலைகளும் நாளை ஆரம்பிக்க வுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நேற்று 400இற்கு மேற்பட்டோருக்கு கொரோனா



நாட்டில் மேலும் 487 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்ட றியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, தொற்று கண்டறியப் பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரி விக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 252 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 19 ஆயிரத்து 771ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றி லிருந்து குணமடைந்து 319 பேர் வீடுக ளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 13 ஆயிரத்து 590பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஆறாயிரத்து 107பேர்தொடர்ந்தும்வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றி னால் ஒருவர் மரணித்துள்ள நிலையில் மொத்த மரணங்கள் 74ஆகப் பதிவாகி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்-5

புதுமணமான தம்பதியினருக் கான சுகாதார சேவைகளை உங் கள் பிரதேச சுகாதார வைத்திய அதி காரி பணிமனையில் பெறலாம்.

பின்வரும் சேவைகள் வழங்கப் படுகின்றன.

- கணவன், மனைவி இருவ ருக்குமான மருத்துவ பரிசோத னைகள், குருதிப் பரிசோதனை கள்.
- கர்ப்பந்தரிப்பதற்கு முன்னான ஆலோசனை வழிகாட்டல், போலிக்கமில மாத்திரைகள் வழங்கல்.
- குடும்ப திட்டமுறைகள் தொடர் பான ஆலோசனைகள்
- குடும்பத்திற்கான ஆணின் பங்க ளிப்பு , இம்சையற்ற குடும்பம் தொடர்பான ஆலோசனைகள்.
- போசாக்கு தொடர்பான வழி காட்டல்.

திருமணம் முடிவடைந்தவுடன் உங்கள் குடும்ப நல உத்தியோ கத்தரினை தொடர்பு கொண்டு இச் சேவைகளைப் பெற்றிடுங்கள்.

**வைத்திய கலாநிதி கோ.றஜீவ்**

# உடல்களை அடக்கம் செய்வதற்கு மன்னார் என்ன சுடுகாடா?

கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளாகி மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு மன்னார் என்ன சுடுகாடா என பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பகிரங்கமாகக் கேள்வியெழுப்பினார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று (22) காலை ஊடக சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போது, கொரோனா வைரஸ் தொற்றில் மரணிப்பவர்களின் சடலங்களை, மன்னாரில் அடக்கம் செய்வது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஊடக வியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே, அவர் மேற்கண்ட வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், “கொரோனா வைரஸ் பல நாடுகளில் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலும் அதனுடைய தாக்கம் தற்போது மிகத் தீவிரமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.




“இந்த சூழ்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் மரணிக்கின்ற தங்களுடைய மதத்தைச் சேர்ந்தவர்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி தரவேண்டுமென்ற இஸ்லாமிய மதத் தலைவர்களது கோரிக்கையை நான் வரவேற்கிறேன். அவர்களுடைய மதம் சார்ந்த நம்பிக்கைக்கு, சுகாதார அமைச்சின் ஆலோசனையைப் பெற்று, அதைச் செய்வதை நான் வரவேற் கின்றேன்.

“ஆனால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் மரணிக்கின்ற அனைத்து முஸ்லிம் உறவுகளினுடைய ஜனாஸாக்களை, மன்னார் மாவட்டத்தில் அடக்கம் செய்வதற்கு ஒரு யோசனை முன்வைத்ததாக அறிகின்றேன். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கேட்க விரும்புகின்றேன், மன்னர் என்ன சுடுகாடா?

“கடல் இருக்கின்ற பிரதேசத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்றால் இலங்கையை சுற்றி எல்லா இடமும் கடல்தான் இருக்கின்றது. அந்தந்த மாவட்டங்களில் இறக்கின்றவர்களை அவர்களுடைய மாவட்டத்தில் ஒரு பொதுவான இடத்தில் அடக்கம் செய்வது தான் முறை.

“ஆனால், ஏனைய மாவட்டங்களில் மரணிக்கின்றவர்களையும் மன்னார் மாவட்டத்தில் அடக்கம் செய்வதை மன்னார் மாவட்ட மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அது ஒரு நியாயமான செயலும் அல்ல” என்றார்.

# குருநாகல் தபால் நிலையத்தில் 14 ஊழியர்களுக்கு கொரோனா



குருநாகல் பிரதான தபால் நிலைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை மூலம், 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் பணியாற்றிய 60 பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி தொற்றாளர்களி டையே உயரதிகாரிகள் எழுவர் உள்ளடங்குவதாக தெரிவிக்கப் படுகிறது.

# யாழிலிருந்து 638 கிலோ மீற்றர் தொலைவில் தழமுக்கம் வடக்கு கிழக்கில் "நிவார்" புயல் எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்குள் 150 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் நிலவும் தாழமுக்கமானது அடுத்துவரும் 36 மணித்தியாலங்களில் குறைந்த அழுத்தமாக மாறக்கூடும் எனவும், அடுத்துவரும் 48 மணித்தியாலங்களுக்கு இது புயல் சின்னமாக மாற்றம் பெறக்கூடும் என்றும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து 638 கிலோ மீற்றர் தொலைவில் உருவாகியிருக்கும் தழமுக்கம் ஒரு புயலாக வலுப்பெற தேவையான அத்தனை ஏதுக்களையும் பெற்றிருக்கும் நிலையில் புயலாக மாறும் வாய்ப்புக்கள் பெரும்பாலும் உள்ளதாக யாழ்.பல்கலைகழக புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது, குறித்த தாழமுக்கம் புயலாக மாறினால் அதற்கு "நிவார்" என்ற பெயர் வழங்கப்படும். எனவும் அந்த பெயரை ஈரான் நாடு இட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். மேலும் தாழமுக்கம் வேமாக நகர்ந்து வரும் நிலையில் இலங்கையின் வடகிழக்கு பகுதியில் அதன் தாக்கத்தை உணரலாம்

எனவும் கூறியுள்ளார். மேலும் குறித்த தாழமுக்கம் 23ம் திகதி இரவு புல்மோட்டைக்கு நேராக தரைப்பகுதியை நோக்கி நகர்ந்து 24ம் திகதி முல்லைத்தீவின் கரையோரபகுதிக்கு சமாந்தரமாக வடமராட்சி கிழக்கு (24 ரூ25. 11.2020) வரை நகர்ந்து பின்னர் வடக்கு நோக்கி நகர்கின்றது.

இன்றைய (22.11.2020 10.30 மு.ப.) நிலையில் திருகோணமலை, முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி கரையோரப்பகுதிகளில் கன மழையும் கடும் காற்றும் வீசக் கூடும். முல்லைத்தீவுக்கு 160 மி.மீ. க்கு கூடுதலாகவும், வடமராட்சி கிழக்கிற்கு 145 மி.மீ. க்கு கூடுதலாகவும்

கிளிநொச்சிக்கு 115 மி.மீ. க்கு அண்மித்தும் மழை கிடைக்க வாய்ப்புண்டு. (தாழமுக்க விருத்திக்கேற்ப இவை மாற்றமடையலாம்). அதே சமயம் எதிர்வரும் 24.11.2020 இல் முல்லைத்தீவில் காற்றின் வேகம் மணிக்கு 60 கி.மீ. வேகத்தை விட கூடுதலாகவும், 24,25 மற்றும் 26 ஆம் திகதிகளில் களில் சாளை, சுண்டிக்குளம்,

வடமராட்சி கிழக்கு மற்றும் பருத்திதுறை பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 கி.மீ. இனை விட கூடுதலாக வீச வாய்ப்புண்டு. வடக்கின் ஏனைய பகுதிகளிலும் இக்காலப்பகுதியில் கன மழையுடன் காற்றின் வேகமும் அதிகரித்துக் காணப்படும்.

## குழந்தைக்கு ஏணைகட்டிய தந்தை தவறி விழுந்து மரணம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இருட்டு மடு பகுதியில் பிறந்த தனது குழந்தைக்கு ஏணை கட்ட வீட்டின் சீற் மரத்தில் ஏறியகுடும்பஸ்தர் தவறிவீழ்ந்து படுகாய மடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தின் போது காயமடைந்த குடும்பஸ்தர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்கைக்காக,

யாழ்போதனா மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு பின்னர் மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் 21.11.2020 அன்று நடைபெற்றுள்ளது.

இருட்டு மடுவினை சேர்ந்த 36 அகவையுடைய இராமசாமி மோகன்றாச் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குழந்தை பிறந்து பத்து நாட்கள் ஆகாத நிலையில் ஏணிகட்ட ஏறியபோது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

## மருத்துவர்களின் அசண்டையீனதாலேயே மருத்துவமனையில் சிறுமி மரணம்

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

விபத்து காரணமாக காயமடைந்த சிறுமி ஒருவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், வைத்தியசாலை அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு தேத்தாத்தீவு பிரதான வீதி பகுதியில், நேற்று இடம்பெற்ற விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட 7 வயது சிறுமியின் விபத்து நிலையினை எக்ஸ்ரே படம் எடுப்பதற்கு முடியாத நிலையில் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று மூன்று மணித்தியாலங்கள் கழித்து எக்ஸ்ரே எடுக்கப்பட்டதால் குறித்த சிறுமியின் உடல்நிலை மேசமானதாகவும் வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர்.

இதைத்தொடர்ந்து வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த மயில்வாகனம் சனுசியா சிகிச்சை பலனின்றி இன்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமியின் உயிரிழப்புக்கு வைத்தியசாலை அதிகாரிகளின் கவனயீனம் காரணம் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதுடன் இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாக சிறுமியின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் குறித்த சிறுமியின் உயிரிழப்பு தொடர்பாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கே.கலாரஞ்சனியிடம் கேட்டபோது, குறித்த சிறுமியின் உயிரிழப்பு தொடர்பாக வைத்தியசாலை மட்ட விசாரணை நடாத்தப்பட்டு அதற்கான நடவடிக்கையினை எடுப்பதாக தெரிவித்தார்.

## பகளுத்துறை மாவட்டத்தின் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன

களுத்துறை மாவட்டத்தின் மேலும் சில பகுதிகள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி பண்டாரகம பொலிஸ் பிரிவின் போகஹ வத்தை, பமுணுமுல்ல, கிரிமன் துடாவ, கோராவல, அடலுகம மேற்கு, கலஹாமண்டிய ஆகிய 7 பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு, ராகமை, வத்தளை, பேலியகொடை மற்றும் களனி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் அமுலில் இருக்கும் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழர் உணவு...

உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்களுக்கான நினைவேந்தலை தடைசெய்ய கோரி யாழ்ப்பாண பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில் முன்னிலையாகி குறித்து பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி, தமிழ் மக்களின் உண்ணும் உணவுகளை கொச்சைபடுத்தும் முகமாக 'சோறும், புட்டும், வடையும் சாப்பிட்டுக் கொண்டிருந்த வடக்கு மாகாண மக்களுக்கு பீட்சா சாப்பிடும் நிலையை உருவாக்கினோம்' என நீதிமன்றில் கருத்து கூறியிருந்தார்.

30 வருட கால கொடிய யுத்தத்தினால் துயருற்ற எமது மக்கள் அக்காலத்தில் கூட உணவு பஞ்சத்தால் உயிர் நீத்த சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவரது கருத்தானது அனைத்து இலங்கை நாட்டில் வாழும் மூவின மக்களையும் ஒரே சட்டத்தால் பரிபாலிக்கும் பொலிஸ்துறையில் உயர் பதவியில் இருப்போர் இன ஐக்கியத்தை குழப்புவதை மற்றும் தமிழ் மக்களின் மனதை புண்படுத்தும் வகையில் கருத்து கூறுவதை தவிர்த்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களை தேர்தலின் போது உசுப்பேத்தி அரசியல் சுயலாபம் தேடுகின்ற அரசியல்வாதிகளுக்கு இவ்வாறான கருத்துக்கள் எதிர்வரும் காலங்களில் மக்களை ஏமாற்றுவதற்கு பக்க பலமாக அமைந்து விடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பலாலி அன்ரனிபுர...

பணியை நிறுத்திவிட்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு அறிவித்துள்ளார் பொலிசார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் குறித்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன

குண்டுகளை செயலிழப்பதற்காக

வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள தரவை பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

### திருமண நிகழ்வில்...

கலந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறிய திருமண வீட்டாரையும், திருமண நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### பாடசாலைக் கொரோனா...

க.பொ.த உயர்தர பரீட்சை ஆரம்பிக்கும் போதே ஆடைத்தொழிற்சாலை நோயாளர்கள் கண்டறியப்பட்டனர். அதன் காரணமாகவே பரீட்சையை இரு வாரங்களுக்காவது ஒத்திவைத்து தொற்றைக் கட்டுப்படுத்திய பின்னர்,

பரீட்சையை நடாத்துங்கள் என கேட்டோம். பரீட்சை தொடர்ந்தது. தொற்றோடு மாணவர்களும் பரீட்சை எழுதினர். அதனை இயல்பு நிலையென கருதிய மக்கள் சாதாரணமாக நடந்து கொண்டனர்.

அதன் விளைவே இன்றைய மோசமான நிலைக்கும் காரணம்.

நாட்டில் உருவாகியுள்ள இரண்டு கொத்தணிகளுக்கு மேலதிகமாக பாடசாலை கொத்தணி என ஒன்று உருவாவதற்கு வழியேற்படுத்த வேண்டாம். என கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு சில அறிவுறுத்தல்கள் இன்னும் தெளிவில்லாமல் இருக்கிறது.

ஆரம்ப பிரிவுகள்(1-5) இணைந்துள்ள இடைநிலை, மேல்நிலைப் பாடசாலைகளின் ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் பாடசாலை செல்ல வேண்டுமா?

வெவ்வேறு மாவட்டங்களில் கடமையாற்றும், வேறு மாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டும். தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வாழுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகள் இயங்கும் பிரதேசங்களுக்கு எவ்வாறு செல்வது அவர்களின் கடமை ஒழுங்கு என்ன?

போன்ற விடயங்களில் தெளிவான அறிவித்தல்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

### அலரிமாளிகையில்...

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையின் பணிகளுக்கென, ஏனைய அரச நிறுவனங்களை போன்று சேவைகளை நிறைவேற்றுவதற்கு அத்தியவசியமான மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், பசில் ராஜபக்ஷவின் தலைமையில் முன்னெடுக்கப்படும் ஜனாதிபதி செயலணியின் பணிகளும் எவ்வித தடையுமின்றி அலரி மாளிகை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதமரின் பாதுகாப்பு பிரிவுடன் தொடர்புடைய வெளிப்புற பிரிவினரே கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புப்பட்டுள்ளனர்.

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையில் கடமையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் வழமைப்போன்று கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் உறுதிபடுத்துகின்றோம்.

### 20 ஆயிரத்தை...

இதையடுத்து தற்போதைய நிலையில் இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 19 ஆயிரத்து 9946 ஆக அதிகரித்து 20 ஆயிரத்தை நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே நாட்டில் கொவிட் 19 தொற்றிலிருந்து இன்றைய தினம் மேலும் 479 பேர் குணமடைந்தனர்.

இதற்கமைய 14 ஆயிரத்து 69 பேர் இதுவரையில் இந்த நோய்த்தொற்றில் இருந்து குணமடைந்து சிகிச்சை நிலையங்களில் இருந்து வெளியேறி இருப்பதாக தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது ஐந்தாயிரத்து 619 பேர் கொவிட் 19 நோய்தொற்றுடன் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 83 ஆக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### வவுனியாவில்...

தரிவித்ததுடன், மாவீரர் தினம் அனுஸ்டிப்பு தொடர்பாக நீதிமன்றத்தின் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட முடியாதென தெரிவித்தனர்.

ஆனால் மாவீரர் தின அனுஸ்டிப்பு அல்லது எங்களுடைய வீடுகளிலே வழிபடுவதற்கு உரிமை இருக்கின்றது என்பதை பொலிஸாருக்கு அங்கிருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.



# கொரோனோ மரணம் 83 ஆக உயர்வு!

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் வெள்ளவத்தை உட்பட கொழும்பின் பல பகுதிகளைச் சேர்ந்த 9 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த 76 வயதுடைய நபர் ஒருவர் முல்லேரியா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

இதேபோன்று கொழும்பு 13ஐச் சேர்ந்த 69 வயதுடைய பெண்ணொருவரும் கொழும்பு 10ஐச் சேர்ந்த 72 வயது ஆணும் தங்கள் வீடுகளில் உயிரிழந்துள்ளனர்.

தெமட்டகொடையைச் சேர்ந்த 89 வயது நபர் ஒருவரும் வீட்டில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கொழும்பு 10ஐச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளார். வெல்லம்பிட்டியை சேர்ந்த 65 வயது நபர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

வெல்லம்பிட்டியை சேர்ந்த 76 வயது பெண்ணொருவர் ஹோமாகம வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கொழும்பு இரண்டைச் சேர்ந்த 57 வயதுடைய நபரொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 83 ஆக அதிகரித்துள்ளது.

# ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து தப்பிச்சென்ற பெண் பிடிபட்டார்!

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தப்பிச் சென்ற பெண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் இரத்தினபுரி-எஹெலியகொட பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது தனது இரண்டரை வயது மகனுடன் குறித்த பெண் நேற்று முன்தினம் இரவு தப்பியோடியிருந்தார்.

இந்நிலையில், பெண்ணைக் கண்டு பிடிக்க புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் விசாரணை மற்றும் தேடுதல் இடம்பெற்று வந்தநிலையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் மகனுடன் பேருந்தில் தனது ஊருக்குச் சென்றுள்ளதுடன், அங்குள்ள உறவினர் ஒருவருர் வீட்டில் மகனை ஒப்படைத்து விட்டு அங்கிருந்து சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில கொரோனா விழிப்புணர்வு செயற்திட்டம்





கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமியின் அனுசரணையுடன், தென்மராட்சி சேவை நிறுவனம் கனடா, நடாத்தும் மாபெரும் கொரோனா (COVID-19) விழிப்புணர் செயல்திட்டம். “எம்மவர் உயிர்களை நாமே பாதுகாப்போம்” எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்தியத்தில் இன்று(22) இடம்பெற்றது.

கொரானா (COVID-19) பற்றிய ஒரு மாபெரும் விழிப்புணர்வு வழங்கும் இந்தச் செயல்திட்டமானது இலவச முகக்கவசம் வழங்கி வைக்கப்பட்டதுடன் பொது மக்களுக்க்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கி வைக்கப்பட்டது.

இதன் போது அம்பாரை மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன், கரைதீவு பிரதேச சபை தவிசாளர் ஜெயசிறில்

கல்முனை மாநகர சபை உறுப்பினர் சிவலிங்கம் ,கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி அர்சாத் காரியப்பர் மற்றும் முக்கியஸ்தகர்கள் பலர் இதன் போது கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்தப் பிரதேசங்களில் இவ் செயல்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் மேலும் மூவருக்கு கொரோனா

நுவரெலியாவில் மேலும் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லிந்துலை- லிப்பகலை, அக்கரப்பத்தனை மற்றும் பூண்டுலோயா ஆகிய பகுதிகளிலுள்ள மூவருக்கே நேற்று (சனிக்கிழமை) கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், இவர்கள் மூவரும் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள கொரோனா வைரஸ் தடுப்பு சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

லிந்துலை லிப்பகல தோட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர், தலவாக்கலை- சென்கிளயார் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட பெண்ணின் கணவராவார்.

கடந்த 16 ஆம் திகதி கொழும்பு-தெமட்டகொடை பகுதியில் இருந்து வந்து தோட்டத்தில் உள்ள தனது வீட்டில் இவர் இரகசியமாக தங்கியுள்ளார்.

எனினும், இவர் தொடர்பில் பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். பரிசோதனை முடிவில் அவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அக்கரப்பத்தனை பெல்மோர் தோட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளவர், கொழும்பு 12 பகுதியில் இருந்து வந்துள்ளார். இதனால் அவரிடம் பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. பரிசோதனை முடிவுகள் வெளியான நிலையில் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பில் கூலித்தொழிலாளியாக வேலைசெய்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் பூண்டுலோயா சீன் தோட்டத்திலுள்ள தனது வீட்டுக்கு கடந்த 16 ஆம் திகதி வந்துள்ளார். பி.சி.ஆர். பரிசோதனை மூலம் அவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் பல இடங்களுக்கு சென்று வந்துள்ளார் என்பதை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

எனவே, அவருடன் தொடர்பில் இருந்த 50ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

# கழுத்து இறுகி மரத்தில் தொங்கிய நிலையில் 9 வயது சிறுவன் சடலமாக மீட்பு

புத்தளம் புதிய எலுவன்குளம் பிரதேசத்தில் மரத்தில் தொங்கிய நிலையில் சிறுவனின் சடலம் ஒன்று நேற்று (21) மீட்கப்பட்டுள்ளதாக,

புத்தளம் மற்றும் கற்பிட்டி பகுதிகளுக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

முஹம்மது அர்ஷான் முஹம்மது அம்மார் (வயது 09) எனும் சிறுவனின் சடலமே இவ்வாறு மீட்கப் பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற நேற்று (21) நண்பகல் வேளை, குறித்த சிறுவன் மதிய உணவு உட்கொண்ட பின்னர் விளையாடுவதற்காக வெளியே வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சிறுவனின் தாய் தனது இரண்டாவது மகனுக்கு மதிய நேர உணவைக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வெளியே வந்து பார்த்த போது தனது மூத்த மகன் வீட்டு வளவுக்குள் உள்ள கொய்யா மரத்தில்,

விளையாட்டுக்காக கட்டப்பட்டிருந்த செய்லன் பட்டையில் கழுத்து இறுகி தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.



இதனையடுத்து, அதிர்ச்சியடைந்த தாயின் அழுகுரலைக் கேட்ட, தாயின் தந்தை உட்பட அயலவர்கள் அங்கு வருகை தந்து,

மரத்தில் தொங்கிய நிலையில் காணப்பட்ட குறித்த சிறுவனை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவனின் கழுத்து இறுகியமையால் இந்த மரணம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து சடலத்தை பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளதாக புத்தளம் மற்றும் கற்பிட்டி பகுதிகளுக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மேலும் தெரிவித்தார்.